# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

DW4– முருகேசன் நாள்.18.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் தகவல்சொல்லி தான் நிருபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. எனக்கு இந்த வழக்கு போட்ட விவரம் மற்றும் வழக்கு விவரம் எப்படி தெரியும் என்றால் வாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி சொல்லி தெரியும். சொத்துகள் எப்படி அவர்களுக்கு கிடைத்தது என்ற விவரம் தெரியுமா என்றால் இரண்டு இரண்டு ஏக்கராக 1ம் பிரதிவாதி வாங்கிவந்தார். எந்த வருடம் என்று தெரியாது. சொத்துக்கள் வாங்குவதற்கு முன்பு அவர்கள் குடும்பத்தில் சொத்துகள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பூர்விக சொத்துக்கள் இல்லையென்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தெரிந்து இல்லை. அ அட்டவணையில் 1 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் என்ன என்ன சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சின்னராஜ் சொத்துவாங்கும்போது நான் உடன் செல்லவில்லை. அந்த பணம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. தாவா அ அட்டவணை 8வதுஅயிட்ட சொத்து என்ன சொத்து தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதி வீடு வாங்கினார். சொத்து வாங்குவதற்கு சிவக்குமார் ரூ.1லட்சம் அனுப்பினார். அதை நான் பார்த்தேனா என்றால் 1ம் பிரதிவாதி சொன்னார். 2004ம் ஆண்டு பேங் மூலம் பணம் அனுப்பினார். எனக்கு அந்த விவரம் நேரடியாக தெரியாது. சொல்லி தெரியும். நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் 1ம் பிரதிவாதி சொல்லி தெரியும். நேரடியாக தெரியாது. சாட்சியம் அளிக்க என்னை நீதிமன்றத்திற்கு சிவக்குமார் அழைத்துவந்தார். அ அட்டவணையில் 1 முதல் 6 அயிட்டங்கள் சிவக்குமாரின் தனிப்பட்ட சொத்து என்று எந்த சொத்தை கூறுகிறேன் என்றால் பிளாட்டுகள், வீடுகள் ஆகும். அவை பெரம்பலூரில் உள்ளது. சென்னையில் இருக்கும்விவரம் தெரியாது. 9ம் அயிட்ட சொத்து என்ன சொத்து அது எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. சிவக்குமாருக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு வருடம் சரியாக தெரியாது. சிவக்குமார் எந்த வருடம் வெளிநாடு சென்றார் என்று எனக்கு தெரியாது. கவிதா மற்றும் நித்யாவிற்கு எவ்வளவு நகைகள் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நித்யா எந்த வங்கியில் எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் வைத்தார் என்று எனக்கு தெரியாது. அய்யர்குட்டையில் எந்த வருடம் வீடு கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. நித்யா வாங்கிய கடனை எந்த தேதியில் சிவக்குமார் பணம் அனுப்பி அடைத்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி ஊர் விசயங்களில்

முக்கியமாக முன்னின்று செய்யக்கூடிய நபர் என்றால் சரிதான். ஊர்க்காக அவர் வழக்குகள் நடத்தியுள்ளார் என்றால் சரிதான். அவர்மீது கிரிமினல் வழக்கு போடப்பட்டிருந்ததா என்றால் எனக்கு தெரியாது. வாதி 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் 3ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சிறுவயது முதல் வாதிதான் வயல்வேலைகளை செய்துவந்தார் என்றால் சரிதான். அந்த விவசாயத்தின் மூலம் வருமானம் வரும்என்றால் ஒருவருடம் வரும், ஒருவருடம் வராது. நவதானியங்களை வாங்கி மொத்தமாக விற்கும் கமிசன் வேலைகளை வாதி செய்துவந்தார் என்றால் சரிதான். அந்த வியாபாரத்தில் நல்ல வருமானம் வரும்என்றால் வருமானம் வரும் போகும். வாதிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். வாதியின் சகோதரிகளுக்கு எப்போது திருமணம் ஆனது, எவ்வளவு நகைகள் போட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். திருமணத்தின்போது போடவில்லை. அதன்பின்னர் போட்டார்கள். வாதியின் விவசாய வருமானம் மற்றும் வியாபார வருமானத்தை வைத்து நகைபோட்டார்கள் என்றால் வெளிநாட்டு வருமானத்தை வைத்தும் நகை போட்டார்கள். 1ம் பிரதிவாதிக்கு அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நித்யா அழைத்துசென்றார். வாதி செல்லவில்லை. நித்யா மருத்துவமனைக்கு அழைத்துசென்ற பின்னர் ஒருமாதம் கழித்து சிவக்குமார் வந்தார். சிவக்குமார் வெளிநாட்டில் டிரைவர் வேலைபார்த்தார். எவ்வளவு சம்பளம் என்று தெரியாது. நித்யா சுமார் 5, 6 வருடங்கள் வெளிநாட்டில் இருந்தார். அவர் நர்ஸ் வேலைபார்த்தார். சம்பளம் எவ்வளவு என்று தெரியாது. அவர் அரசாங்கத்தில் நர்ஸ் வேலைபார்த்தாரா அல்லது தனியார் மருத்துவமனையில் நர்ஸ் வேலைபார்த்தாரா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியை வைத்தியத்திற்காக வாதி தான் அழைத்துசென்றார் என்றும், அதன்பின்னர் தான் நித்யாவும், சிவக்குமாரும் வந்தார்கள் என்றால்சரியல்ல. 2014ம் ஆண்டு சிவக்குமாருக்கு 1ம் பிரதிவாதி வயல்சம்மந்தமாக பத்திரம் எழுதி கொடுத்தார். சுத்தகிரயமாக எழுதிகொடுத்தார். அதே வருடம் வீட்டையும் எழுதி கொடுத்தார். நான் பத்திரம் எழுதும்போது போகவில்லை. 1ம் பிரதிவாதி சொல்லி இந்த விவரம் தெரியும். தாவாசொத்துகளில் வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லையென்று எப்படி சொல்கிறேன் என்றால் வாதி தனியாக நிலம் வைத்துள்ளார். அதை அவர் அப்பா வாங்கினார். பங்கு பிரித்து கொடுக்கவில்லை. அவர் அப்பா ஒதுக்கி கொடுத்தார். சுகுணா, சாந்திக்கு சொத்துக்கள் ஒதுக்கவில்லை. சொத்துக்களை வாங்குவதற்கு வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் எந்த பங்களிப்பும் செய்யவில்லை என்று எப்படி சொல்கிறேன் என்றால் சிவக்குமார் வெளிநாட்டில் சம்பாதித்தை வைத்து வாங்கப்பட்டது. இந்த விவரம்

நேரடியாக தெரியாது. வாதிக்கு குடிப்பழக்கம் கிடையாது. ஆடம்பரமாக வாழ்வது போன்று தெரியவில்லை. தாவா சொத்தின் ஒட்டியுள்ள என்னுடைய பாகநிலத்தை நான் விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு அய்யர்குட்டையில் வாதி நிலத்தின் அருகில் நிலம் உள்ளது. பொதுகுடும்ப பூர்விக சொத்துக்களை விற்று தான் சொத்துகள் வாங்கப்பட்டது என்றும், அதன்பின்னர் அந்த வருமானம் மற்றும் வாதியின் வருமானம் மற்றும் வெளிநாட்டு வருமானத்தை சேர்த்துதான் மற்ற சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், சிவக்குமார் சொல்லிகொடுத்து அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.